பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 15 | வெள்ளிக்கிழமை | 29.03.2024 | அதிர்வு 241

## கத்தரிக்கோலால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை

### கிராண்ட்பாஸில் பயங்கரம்

கத்தரிக்கோலால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் கொழும்பு – கிராண்ட்பாஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

06▶

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரம்:

# மைத்திரியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அதிரடி உத்தரவு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் 4ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் நேற்று கருத்துக்களை அறிக்கையிட்டதன் பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

06▶

# நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஆட்சி முறையில் கட்டாயம் மாற்றம் வேண்டும்

### கொழும்பு பேராயர் இல்லம் கோரிக்கை

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஆட்சி முறை கட்டாயம் மாற்றப்பட வேண்டும் என்று கொழும்பு பேராயர் இல்லத்தின் பொதுச்செயலாளர் அருட்தந்தை ஜே.டி. அந்தோனி ஜெயக்கொடி வலியுறுத்தியுள்ளார்.

பெரிய வெள்ளி தினத்துக்காக அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

"நாடு கடுமையான சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வேளையில் இன்று பெரிய வெள்ளி கொண்டாடப்படவுள்ளது. மக்களின் துன்பங்களைக் குறைக்க நாட்டின் ஆட்சி அமைப்பில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். இது அனைத்து குடிமக்களின் பொறுப்பு." – என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று ஐந்து ஆண்டுகளை அண்மித்துள்ள போதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை என்றும் கொழும்பு பேராயர் இல்லத்தின் பொதுச்செயலாளர் விசனம் தெரிவித்துள்ளார்.

# விமல், டலஸ் அணிகளுக்கு வலை வீச வேண்டும் மஹிந்த

### எஸ்.பி. வலியுறுத்து



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான கூட்டணியில் இருந்து வெளியேறியுள்ள டலஸ் அழகப்பெரும, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரை மீண்டும் இணைத்துகொள்வதற்கான பேச்சுகளை மஹிந்த ராஜபக்ஷ உடன் ஆரம்பிக்க

06▶



ஞானசார தேரர் விடயத்தில் சட்டம் தன் கடமையைச் செய்திருக்கின்றது.

நேற்றுத் தீர்ப்பு வெளியானதும், அச்சமயம் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி இருந்த ஞானசார தேரரை நீதிமன்ற உத்தரவுப்படி மன்றிலிருந்து நேரடியாக சிறைச்சாலைக்குக் கொண்டு சென்று, அடைத்து விட்டனர்.

அப்படியானால் இந்த வழக்கில் ஞானசாரர் தப்ப இடமில்லையா என்று கேட்டால் இன்னும் இடமுண்டு என்பதுதான் பதில்.

நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலேயே, அத்தீர்ப்புக்கு எதிராக ஞானசாரர் மேன்முறையீடு

06▶

# கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட 9 பேருக்கு ஏப்ரல் 8 ஆம் திகதி வரையில் விளக்கமறியல்



போலி மருந்து கொடுக்கல் – வாங்கல் தொடர்பான வழக்கில் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 9 பேர் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சிறைச்சாலை வானிலும், ஏனைய சந்தேகநபர்கள் சிறைச்சாலைகள் பஸ்ஸிலும் அழைத்து வரப்பட்டனர்.

பதிவு செய்யப்படாத நிறுவனமொன்றிலிருந்து போலி மருந்துகளை கொள்வனவு செய்து வைத்தியசாலைகளுக்கு விநியோகித்தமை தொடர்பிலேயே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட 9 பேருக்கு எதிராக இந்த வழக்கு இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில், விசாரணையின் முன்னேற்றத்தை நீதிமன்றத்திற்கு அறிவித்தமையுடன், சர்ச்சைக்குரிய மருந்துகள் விநியோகிக்கப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் நோயாளர்கள் தொடர்பில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விசாரணை நடத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றில் நேற்று அனுமதி கோரினார்.

அத்துடன், போலி மருந்துகள் வழங்கப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்பட்ட அறிகுறிகள், இறப்புகள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் அனுமதி கோரப்பட்டது.

இந்த கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்கிய மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரம, சந்தேகநபர்களை எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.




# லொத்தர் சபையால் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் பங்களிப்பு அதிகரிப்பு!

அபிவிருத்தி லொத்தர் சபை அதன் 40 வருட வரலாற்றில் 2023 இல் அதிகூடிய இலாபத்தை பதிவு செய்துள்ளது.

இதன்படி, அபிவிருத்தி லொத்தர் சபை 2022 – 2023 ஆம் ஆண்டில் 32 வீத இலாபமீட்டி புதிய சாதனையை படைத்துள்ளது, இது 2022 இல் பெற்ற இலாபத்தின் இருமடங்காகும்.

இதன்படி, ஜனாதிபதி நிதியத்திற்கு அபிவிருத்தி லொத்தர் சபையினால் வழங்கப்பட்ட பங்களிப்பு கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 13 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

3,622,506,725 ரூபா தொகை 03 பில்லியன் இலக்கை கடந்துள்ளது. அதே சமயம், அரசாங்கத்திற்கான பங்களிப்பை 6 வீதம் உயர்த்தி 5,193,833,721 ரூபாவை (5.19 பில்லியன் ரூபா) வழங்கியுள்ளது.

அவிருத்தி லொத்தர் சபையின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஜித் குணரத்ன நாரங்கல இது குறித்து கருத்து தெரிவிக்கையில் –

“சவாலான காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தின் எதிர்மறையான விளைவுகளை குறைக்க அபிவிருத்தி லொத்தர் சபை கையாண்ட உத்திகளால் மிகக் குறுகிய காலத்தில் வருமானம் அதிகரிக்க வழி ஏற்பட்டது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான விசேட வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்.

வழமையான லொத்தர் சீட்டுகள் மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேட சீட்டுகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை அதிகரிக்க அபிவிருத்தி லொத்தர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நாட்டு பயனாளிகளுக்கு புதிய அனுபவத்தை வழங்கும் வகையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக லொத்தர் சீட்டுகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் வருமானத்தில் 50 வீதம் இந்த நாட்டில் கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக ஒதுக்கப்படுகின்றது.” – என்றார்.

# ஏற்றுமதி வருமானமாக நாட்டிற்கு 2 மாதங்களில் ரூ.983.7 மில்லியன்

## இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தகவல்



“கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் இலங்கை 983.7 மில்லியன் ரூபா ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுள்ளது. நாடு தற்போது சரியான பொருளாதாரப் பாதையில் செல்வதை, அது உறுதிப்படுத்துகிறது. பாடசாலைக் காலத்திலேயே தொழில்முயற்சி சூழலுக்குள் ஈர்த்தெடுப்பது அவர்களை எதிர் காலத்தில் தொழில்முனைவோராக உருவாக்க வழிவகுக்கும்.”

– இவ்வாறு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து ஒரு நாடாக குறிப்பிடத்தக்களவு சாதனைகளை நாம் அடைந்துள்ளோம். கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 983.7 மில்லியன் ரூபா ஏற்றுமதி வருமானம் கிடைத்துள்ளது.

ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் சுமார் 05 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். மேலும், நம் நாட்டில் 2.5 வீதமாக இருந்த தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கையை 3 வீதமாக அதிகரிக்க முடிந்துள்ளது. நாடு தற்போது சரியான பொருளாதாரப் பாதையில் செல்வதை இந்தத் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

மேலும், ஆடை மற்றும் நெசவுத் தொழில் நிறுவனம் ஏறக்குறைய 500 பிள்ளைகளுக்கு டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கியுள்ளது. ஐ.டி.பி. நிறுவனத்துடன் இணைந்து பாடசாலை தொழில் முயற்சியாளர் வட்டங்களை உருவாக்கி மாணவர்களை பாராட்ட முடிந்துள்ளது.

பாடசாலைக் காலத்திலேயே தொழில் முயற்சியாளர் சூழலை உருவாக்குவது மக்களை தொழில்முனைவோர் ஆக்குவதற்கு பெரும் ஆதரவை அளிக்கிறது என்பதையும் கூற வேண்டும். இதன் மூலம் நாட்டில் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்க முடியும்.

குறைந்த வருமானம் பெறும் 24 லட்சம் குடும்பங்களுக்கு நலன்புரி உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரையிலான 17 லட்சம் பாடசாலை மாணவர்களின் போசாக்குத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில், மதிய உணவு திட்டமும் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், களிமண், பித்தளை, பிரம்பு ஆகிய கைத் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், இத்தாலி, கனடா, ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு இந்நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்வது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஆசிய அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்து, சலுகை வட்டி விகிதத்தில் கடன் வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளோம்.

மேலும், பிரம்புகளை எடுத்துச் செல்வதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சுடன் கலந்தாலோசித்து 500 பிரம்புகள் வரை கொண்டு செல்ல ஏற்பாடு செய்துள்ளோம். மேலும், களிமண் போக்குவரத்தில் அதிகபட்சமாக 05 கியுப்களை அனுமதிப்பதற்கு தேசிய அருங்கலைகள் பேரவையுடன் கலந்தாலோசித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.” – என்றார்.

# ஆமர் வீதியிலுள்ள டயர் கடைகளில் தீ

கொழும்பு, ஆமர் வீதியின் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் உள்ள 3 டயர் கடைகளில் நேற்று திடீரெனத் தீ பரவியது.

8 தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் குறித்த தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

ஒரு டயர் கடையில் பரவிய தீ மேலும் இரண்டு கடைகளுக்குப் பரவியது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். .

முதலாவது ரயர் கடையில் தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.









# யாழ் நகரத்தைத் தூய்மைப்படுத்த நாளை ‘யாழ் ஆரோக்கிய பவனி’!

அனைத்துலக சுழியக் கழிவு தினமான மார்ச் 30ஆம் திகதி (நாளை) “சிகரம்“ நிறுவனத்தின் படலை வடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில், யாழ் மாநகர பகுதியில் தூய நகரை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட ‘யாழ் ஆரோக்கிய பவனி’ தூய்மையாக்கல் பணியும், விழிப்புணர்வு செயற்பாடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் துணைத் தூதரகம், யாழ் மாநகரசபை, யாழ் பிரதேச செயலகம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ் பொலிஸாரின் நேரடிப் பங்களிப்பு மற்றும் ஆதரவுடன் மேற் கொள்ளப்படவிருக்கும் இந்தத் திட்டத்தின்கீழ், யாழ் நகரின் பிரதான வீதிகள் சிலவற்றின் ஊடாகவும், யாழ்ப்பாணத்தின் சுற்றுலா ஈர்ப்பு வலயமாக காணப்படும் மணிக்கூட்டுக் கோபு ரம் முதல் பண்ணை சுற்றுவட்டம் வரையிலான பகுதியிலும் தூய்மையாக்கல் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ் ஆரியகுளம் சந்திப் பகுதியில் காலை 7 மணியளவில் ஆரம்பிக்கும் இந்தப் பணி, 3 வீதிகளூடாக யாழ் பண்ணைப் பகுதி வரையில் மேற்கொள்ளப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஓர் அணியினர் ஆரியகுளம் சந்தியிலிருந்து பருத்தித் துறை வீதியூடாக வைத்தியசாலை வீதியையடைந்து, அங்கி ருந்து மகாத்மா காந்தி வீதியூடாக, மணிக்கூட்டுக் கோபுரம், பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ் கோட்டை, பண்ணை நடைபாதை ஊடாக பண்ணைச் சுற்றுவட்டத்தை அடைவர்.

இரண்டாவது அணி, ஆரியகுளம் சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதியூடாக முட்டாசு கடைச் சந்தியை அடைந்து, கே.கே.எஸ். வீதியூடாக, தபால் கந்தோர் சந்தியைக் கடந்து சுற்றுவட்ட வீதியூடாக பண்ணைச் சுற்றுவட்டத்தை அடையும்.

மூன்றாவது அணி, யாழ் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதான வீதி தண்ணீர் தாங்கி பகுதியிலிருந்து ஆரம்பித்து கடற்கரை வீதியூடாக பண்ணை சுற்றுவட்டத்தை வந்தடையும்.

பண்ணை சுற்றுவட்டப் பாதையை அனைத்து அணிகளும் வந்தடைந்ததும், காலை 9.30 மணியளவில றில்கோ உல்லாச விடுதியினரின் ஏற்பாட்டில் தாகசாந்தி வழங்கப்படுவதுடன், பண்ணை நடைபாதை, யாழ் கோட்டை உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் பகுதிகளை நிரந்தரமாக தூய் மையாகப் பேணும் வழிவகைகள் குறித்த கலந்துரையாட லும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வில், இந்தியத் துணைத் தூதுவர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ் மாநகர ஆணையாளர், மாநகரசபையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் யாழ் வணிகர் கழக பிரதிநிதிகள், உல்லாச விடுதிகளின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

காலை 7 மணி
ஆரிய குளம் சந்தியிலிருந்து

**3 பிரிவாக தூய்மையாக்கல் ஆரோக்கிய பவனி**

அணி 1

யாழ் ஆரிய குளம் சந்தியிலிருந்து ஆரம்பித்து, ஆஸ்பத்திரி வீதி, மகாத்மா காந்தி வீதி, மணிக்கூட்டுக்கோபுரம், பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ் கோட்டை ஊடாக பண்ணை சுற்று வட்டம்

அணி 2

யாழ் ஆரிய குளம் சந்தியிலிருந்து ஆரம்பித்து, ஸ்ரான்லி வீதியூடாக, முட்டாசு கடைச் சந்தி, தபால் கந்தோரடி வழியே பண்ணை சுற்று வட்டம்.

அணி 3

பிரதான வீதி மடத்தடி (தண்ணீர் தொட்டியடி) இலிருந்து கடற்கரை வீதியூடாக யாழ் பண்ணை சுற்றுவட்டப் பகுதி.

மு.ப. 9.30
பண்ணைசுற்று வட்ட நடைபாதை

**தாக சாந்தியும்**

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர், வடக்குமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் ஆகியோருடன், சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவத் துறை மற்றும் வணிகப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும்

**சுற்றுச் சூழல் தூய்மை கலந்துரையாடலும்**






# இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஏழு ஆலயங்களுக்கு வழிபடச் செல்ல அனுமதி

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ் மாவட்டத்தில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 07 ஆலயங்களை பொதுமக்களின் வழிபாட்டிற்காக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என வடக்கு மாகாண ஆளுநரும் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான பி.எச்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் மாவட்டத்தில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் 21 மதஸ்தலங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 07 ஆலயங்களை பொதுமக்களின் வழிபாட்டிற்காக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என ஜனாதிபதி உறுதியளித்தார் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்னிடம் தெரிவித்தார்.

அந்த வகையில் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கட்டுவன் காசி அம்மன் ஆலயம், மானம்பிராய் பிள்ளையார் கோவில், சிவன் கோவில், நாகர் கோவில், சக்தியுடையாள் கோவில், ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில், நாகதம்பிரான் ஆலயம் என ஏழு ஆலயங்கள் பொதுமக்களின் வழிபாட்டிற்காக விடுவிக்கப்படவுள்ளன.

மேலும் யாழ்மாவட்டத்தில் சுமார் 3232 ஏக்கர் காணிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான வர்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மதஸ்தலங்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொண்டுவருகின்றேன் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள மதஸ்தலங்களுக்கு பொதுமக்கள் வழிபாட்டுக்குச் செல்லும்போது ஊடகவியலாளர்களையும் அனுமதியுங்கள். கடந்தகாலங்களில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடவியலாளர்களுக்கு இராணுவத்தினரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஊடகங்கள் சுகந்திரமாக செய்திசேகரிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றார்.

இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருடன் கலந்துரையாடி பரிசீலிக்கப்படும் என மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவர்கள் பதிலளித்தார்கள்.








# யாழ். ஆஸ்பத்திரி மருத்துவக் கழிவுகளுக்கான எரியூட்டி கோம்பையன்மணலில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவ கழிவுகளைஎரியூட்டுவதற்காககோம்பயன்மணல்இந்துமயானத் தில் உருவாக்கப்பட்ட எரியூட்டி திறந்து வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ரூபாய் நிதி பங்களிப்பில் அமைக்கப்பட்ட குறித்த எரியூட்டி கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது.

வைத்தியசாலை மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதில் கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையில் எரியூட்டியை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்வதில் இழுபறி காணப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய யாழ் மாநகர சபை, கோம்பயன் மணல் மயான சபை என்பவற்றின் அனுமதியுடன் எரியூட்டி தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்ய முடியும், அதற்கு நீதிமன்றம் அனுமதி அளிக்கின்றது என்பது குறிப் பிடப்பட்டுள்ளது.

தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்கிறோம், அதனால் மேன்முறை யீட்டுத் தீர்ப்பு வரும் வரையில் மேல் நீதி மன்றம் தற்போது விதித்துள்ள சிறைத் தண்டனைத் தீர்ப்பில் இருந்து பிணையில் வெளியே வர அனுமதிக்க வேண்டும் என்று கோரும் பிணைக் கோரிக்கை மனுவை ஞானசாரர் சமர்ப்பித்து, சிறை யில் இருந்து வெளியே வந்து, பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விட யத்தை முன்னெடுக்கலாம். அத்தகைய பின்புலத்தில் அந்த மேன்முறையீட்டின் முடிவு வரும் வரை, பிணை நிபந்தனைக ளின் அடிப்படையில் ஞானசாரர் வெளி யில் இருக்கலாம்.

ஆனால், பிரச்சினை என்னவென் றால், அப்படி நீதிமன்றத்தில் பிணை மனுத் தாக்கல் செய்து, அது பரிசீல னைக்கு எடுக்கப்பட்டு, பிணை கிடைப்ப தற்கு குறைந்தபட்சம் இரண்டு நீதிமன்ற வேலை நாள்களாவது தேவை. நேற்றுத் தீர்ப்பு. இன்று, நாளை, மறுதினம் எல் லாம் விடுமுறை. ஆகவே அடுத்த வாரம் வரும் வரை இப்போதைக்குச் சிறையில் வாடுவது என்பது ஞானசாரருக்கு எழுதப் பட்ட தலைவிதி.

சிறை வாழ்க்கை ஞானசாரருக்கு புதியதல்ல. ஏற்கனவே சுமார் ஓர் ஆண்டு காலம் உள்ளே இருந்து வந்தவர்தான் அவர்.

கடத்திப் பின்னர் காணாமலாக்கப் பட்ட பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலி கொடவை அச்சுறுத்தியமை தொடர்பான வழக்கு விசாரணை சமயம், நீதிமன்ற வளாகத்துக்குள் புகுந்து, வழக்காளி சந்தியா எக்னெலிகொடவை திரும்பவும் அச்சுறுத்தி, நீதிமன்றத்துக்குள்ளேயே அட்டகாசம் பண்ணி, நீதிமன்ற அவ மதிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றத்தில் 2018 இல் அவருக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. ஆனால் ஒரு வருடத்துக்கும் சற்று குறைவான காலம் அந்த நீதி மன்ற அவமதிப்புக்கான குற்றத்திற் காக சிறையில் இருந்த அவரை, பொது மன்னிப்பு வழங்கி 2019 இல் விடுவித்தார் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஜனாதிபதி மைத்திரியின் அந்தப் பொதுமன்னிப்பு முடிவுக்கு எதிராக சந் தியா எக்னெலிகொட, மாற்றுக் கொள்கை களுக்கான மையம் ஆகிய தரப்புகளி னால் 2019 இல் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, நான்கு வருட நீண்ட சட்டப் போராட்டத்தின் பின்னர் கடந்த ஆண்டு விசாரணைக்கு ஏற்கப்பட்டிருக்கின்றது. அதன் பின்னர் அந்த வழக்கு இன்னும் விசாரணை இன்றி நிலுவையில் தவம் கிடக்கிறது.

பிறிதொரு மரியாதைக்குரிய பிக்குவின் ஊடக மாநாட்டுக்குள் சட்ட விரோதமாகப் புகுந்து, அட்டகாசம் பண்ணிய வழக் கில், குற்றச்சாட்டுக்கள் கழுத்தை இறுக் கிய நிலையில், நீதிமன்றத்தில் விசார ணையின் போது குற்றங்களை ஒப்புக் கொண்டு, மூன்று லட்சம் ரூபா அபராதம் செலுத்தியமையுடன், பிற குற்றங்களுக் கான விடயங்களை சம்பந்தப்பட்ட பிக்கு தரப்புடன் நீதிமன்றுக்கு வெளியில் சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்வதாக நீதிமன்றத்தில் உறுதி கூறி, வெளியே ஒருவாறு தப்பி வந்தவர்தான் ஞானசாரர்.

இப்போது குற்றவாளியாக நான்கு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை பெற்றிருக்கும் வழக்கிலும், இடையில் முஸ்லிம் சமூகத்திடம் தமது வெறுப்பூட்டும் நடவடிக்கைக்காகப் பகிரங்க மன்னிப்புக் கோரித் தப்பும் ஒரு முயற்சியையும் அவர் கையாளத் தவறவில்லை. அது பற்றிய விவரம் இன்றைய முரசு ஆசிரியர் தலை யங்கத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வெளியில் பௌத்த – சிங்கள கடும் போக்கு தீவிர வெறியாளராகத் தம்மைக் காட்டி, சண்டப் பிரசண்டம் பண்ணுவதும், பின்னர் மன்னிப்பு நாடகம் ஆடுவதும், அவரின் வழமையான பண்பியல்புதான்.

இத்தகையவரைத்தான் இந்த நாட் டைச் சீரழித்த ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ 'ஒரே நாடு – ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியின் தலைவராக நியமித்து, தனது தகுதியை நிரூபித்துக் கொண்டார்.

ஞானசாரர் என்றதும் இன்னொரு வழக்கும் தமிழர்களுக்கு நினைவுக்கு வரும். முல்லைத்தீவு மாவட்டம் நீராவியடி பிள்ளையார் கோவில் வளாகத்தில் பிக்கு ஒருவரின் உடலத்தை நீதிமன்ற உத்த ரவை மீறி, அந்த வளாகத்துக்குள் வைத்து எரித்தார் என்ற நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அவரது காலைச் சுற்றிய பாம் பாக இருந்தது. அந்த வழக்கில் மாட்டிக் கொள்ளாமல் அதிலிருந்து ஞானசாரர் தப்பியமை புத்தரின் அருள் என்றுதான் கூற வேண்டும். பிக்குவின் சடலத்தை முன்னின்று எரித்த ஞானசாரருக்கு, அதற்கு முன்னர் அப்படி எரிப்பதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியிருந் தது என்பது தெரிந்திருந்தது என்ற விடயம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட முடியாததால் அந்த வழக்கில் தப்பிப் பிழைத்தார் ஞானசாரர்.

எனினும் மைத்திரியின் பொது மன்னிப் பில் வெளியே வந்த விடயம் இன்னும் நிலுவையில் உள்ளது. அது முடிவுக்கு வரும்போது சில சமயம் அந்த வழக்கில் மிச்சமிருக்கும் காலத்திற்கும் அவர் சிறை புக நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இவ்வளவுக்குப் பின்னரும் அந்த மனுஷன் திருந்துவார் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. ஏனெனில் மதவெறி என்பது ஒரு நோய் அல்ல. அதையும் தாண்டி அது ஒரு பிணி. சிகிச்சை அளித்து மாற்ற முடியாத நோய்தான் பிணி. அதுதான் அவரைப் பிடித்திருக்கும் பேரினவாதப் பிணி.

2019 இல் ஞானசாரருக்கு பொது மன்னிப்பு அளித்து, அவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியே விட்ட போது, அது தொடர்பில் சுமந்திரன் குறிப் பிட்ட ஒரு வரிக் கருத்து எனக்கு இந்தச் சமயத்தில் நினைவுக்கு வருகிறது.

'எல்லோரும் கவனமாக இருங்கள். வெறி நாய் ஒன்றை அவிழ்த்து விட்டு இருக்கிறார்கள்!' – என்ற சாராம்சத்தில் அமைந்தது அந்த வரி....!

## கத்தரிக்கோலால் தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

36 வயதுடைய குடும்பஸ்தரே தாக்குதலில் உயிரிழந்துள்ளார். சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

## மைத்திரியை நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னாலுள்ள உண்மையான சூத்திர தாரிகள் யார் என்பது தமக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஊடகங்களுக் குக் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார்.

நீதிமன்றம் உத்தரவிடுமாயின் மேற் படி தகவல்களைத் தான் இரகசியமாக நீதிபதிகளிடம் வழங்கத் தயார் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன், மேற்படிகருத்துக்கள்குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத் துக்குக் கடந்த திங்கட்கிழமை சென்று வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இந்தநிலையில், மைத்திரிபாலவின் மேற்படி கருத்து தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இவ்வாறு நீதிமன்றத் தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

## விமல், டலஸ் அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும் என்று மொட்டுக் கட்சி நாடா ளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸாநா யக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதா வது:–

"விமல், கம்மன்பில, டலஸ் போன்றவர் கள் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய வேண்டும். இல்லையேல் எமது பக்கம் வர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர்களால் நாடாளு மன்றம் வர முடியாது.

மேற்படி தரப்புக்களை எமது கட்சி இணைத்துக்கொள்ள வேண்டும் என்பது மிக முக்கியம். அதற்கான வேண்டு கோளை நான் விடுத்துள்ளேன். பேச்சு ஆரம்பமாகும் என நம்புகின்றேன்.

இவர்களை இணைப்பதற்கான பேச்சைக் கட்சித் தலைவர் என்ற ரீதியில் மஹிந்த ராஜபக்ஷ உடன் ஆரம்பிக்க வேண்டும்." – என்றார்.



# யாழ். மாநகரசபையின் புதிய கட்டடத்தை கிடைத்த நிதியில் கட்டி முடிக்கப் பணிப்பு

## தேவை ரூ.300 கோடி; ஒதுக்கீடு ஆக ரூ.60 கோடிதான்!

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ். மாநகரசபை புதிய கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட 600 மில்லியன் ரூபாவில் ஒரு பகுதியை மாத்திரம் கட்டிமுடிக்காது மின்தூக்கி, குளிரூட்டி போன்ற தேவையற்ற ஆடம்பரங்களை தவிர்த்து, கட்டடத்தை ஏனையவற்றைக் கட்டிமுடியுங்கள் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றைய தினம் இடம்பெற்றது. இதில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

யாழ்ப்பாணம் மாநகரசபையின் புதிய கட்டடத்தை முழுமையாக கட்டி முடிப்பதற்கு 3000 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. எனினும் 600 மில்லியன் ரூபாவே தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

எனவே ஒதுக்கப்பட்ட 600 மில்லியன் ரூபாவை வைத்து மாநகரசபை கட்டடத்தின் ஒருபகுதியை பூர்த்திசெய்து அக்கட்டடத்தில் சபையை இயங்கவைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் மாநகரசபையின் புதிய கட்டிடத்தில் மின்தூக்கி, குளிரூட்டி, தளபாடங்கள் மற்றும் ஏனைய அலங்காரங்கள் உட்படவே 3000 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

எனவே ஒதுக்கப்பட்ட 600 மில்லியன் ரூபாவில் மாநகரசபை புதிய கட்டடத்தின் ஒரு பகுதியை மாத்திரம் கட்டிமுடிக்காது மின்தூக்கி, குளிரூட்டி போன்ற தேவையற்ற ஆடம்பரங்களைத் தவிர்த்து கட்டடத்தை முழுமையாகக் கட்டிமுடியுங்கள் எனத் தெரிவித்தார்.



# அரிசி, வெங்காய இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த வரி குறைப்பு

அரிசி மற்றும் இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கான வரி 10 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரிச்சலுகை ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மாத்திரமே அமுலில் இருக்கும் என வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் அரிசிக்கு 1 ரூபாவாக குறைக்கப்பட்ட விசேட வர்த்தக வரி ஏப்ரல் 3ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வர்த்தக பொருட்களுக்கான வரியாக 65 ரூபா அறவிடப்பட்டது.

இது 2024 ஜனவரி 21 அன்று அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெற்ற இறக்குமதியாளர்களுக்கே இது பொருந்தும்.

சுங்கக் குறியீடு 1006.30.29 இன் கீழ் ஏனைய அரிசி வகைகளில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு இந்தச் சலுகை கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீரி சம்பாவுக்கு நிலவும் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில், அதற்கு இணையான அரிசியை இறக்குமதி செய்வதற்காகவே இந்த வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சரியான சாத்து!

அடாவடித்தனமும், அட்டகாசமும் எந்த வேளையிலும் தொடர்ந்து கை கொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. சில சமயங்களில் வலிமையான ஹோட்டல்களில் வாங்கிக் கட்ட வேண்டி நேர்ந்து விடும்.

தொடர்ந்து அடாவடித்தனம் பண்ணி வந்த வண. கலபொட அத்த ஞானசார தேரர் நீதிமன்றத்திடம் மீண்டும் பாடம் படிக்கும் நிலை அப்படி வந்திருக்கின்றது.

மதத்தின் தலைவர்களாக இருந்து கொண்டு, மதம் பிடித்தவர்களாக செயல்படுபவர்களுக்கு வைக்க வேண்டிய சூட்டை, சரியான சமயத்தில், சரியான முறையில் வைத்திருக்கின்றது கொழும்பு மேல் நீதி மன்றம்.

பேரினவாதத் திமிரோடு - பௌத்த, சிங்கள மேலாண்மைச் செருக்கோடு, நாட்டில் அராஜகம், அட்டகாசம், அடாவடித்தனம் பண்ணுவோர் விடயத்தில் நீதித்துறை கடும் நீதியாக நடக்கும் என்பது காட்டப்பட்டிருக்கின்றது.

ஞானசாரர் போன்ற காவியுடை வெறிப் போக்கர்களினால் சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குச் சரியான நீதி அந்த முஸ்லிம் மக்களின் புனித ரமழான் மாதத்தில் கிட்டியிருப்பது அவர்களைப் பொறுத்தவரை அல்லாஹ்வின் பேரருள்.

இந்த வழக்கின் விசாரணையின் முடிவுக் கட்டத்தில், வழக்கின் போக்கு எந்தத் திசையை நோக்கிச் செல்கின்றது, தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வலுவான ஆதாரங்கள், நிரூபணங்கள் இருக்கின்றன என்பன எல்லாம் புரியத் தொடங்கியதும், சிறைத் தீர்ப்பு போன்ற மோசமான சிக்கலில் இருந்து தப்புவதற்காகக் கடைசி நேர எத்தனங்கள் சிலவற்றை ஞானசாரர் மேற்கொண்டார்.

சர்ச்சைக்குரிய ஊடக மாநாட்டில் முஸ்லிம் சமூகத்தின் மனம் புண்படும்படியாகத் தாம் தெரிவித்த கருத்துகளுக்காக அந்த சமூகத்திடம் தான் பகிரங்கப் பொது மன்னிப்புக் கோருகின்றார் என ஞானசாரர் அறிவித்தார்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் தாம் வெளியிட்ட அந்தக் கருத்துகளுக்காக முஸ்லிம் சமூகத்திடம் தான் பொது மன்னிப்பு கோருகின்றார் என்ற கதையை அவர் நீதிமன்றத்திலும் அவிழ்த்து விட்டார்.

இதே பாணிக் கதையொன்றை நேற்று வழக்கின் முடிவில் தமது தொகுப்புரையில் ஞானசாரரின் சட்டத்தரணியும் அவிழ்த்து விட்டமை கவனிக்கத்தக்கது.

சர்ச்சைக்குரிய அந்தக் கருத்தை ஞானசாரர் வெளியிட்ட 2016 ஆம் ஆண்டில் இருந்த நாட்டின் நிலைமையின் பின்னணியில்தான் அந்தக் கருத்து வெளிப்பாட்டை நோக்க வேண்டும் என்று ஞானசாரரின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டி இருந்தார்.

ஆனால், இந்தக் கதைகளை எல்லாம் நீதிமன்றம் ஏற்கவில்லை. அது மட்டுமல்ல, இந்த வழக்கின் தீர்ப்பை ஒட்டி நீதிமன்றம் சுட்டிக்காட்டிய இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டும்.

ஒன்று - முஸ்லிம் சமூகத்தையும் மதத்தையும் மோசமாக வையும் விதத்தில் - வெறுப்பூட்டும் விதத்தில் - ஞானசாரர் பேசியமை தவறுதலாக - வாய் தடுமாறி - கோபத்தில் - விபத்தாக - எதேச்சையாக - இடம்பெற்றது அல்ல, வேண்டும் என்றே திட்டமிட்டு அது மேற்கொள்ளப்பட்டது என்பது விசாரணையில் ஐயத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என நீதிமன்றம் கூறியுள்ளமை.

அடுத்தது - இத்தகைய கருத்து வெளிப்பாடுகள் நாட்டில் மத அமைதியையும், ஐக்கியத்தையும் குழப்பத்தக்கவை. ஒரு மதத் தலைவராக இருந்து கொண்டு, மதங்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டி வளர்க்கும் தனது கடப்பாட்டை நிறைவு செய்ய குற்றம் சுமத்தப்பட்டவர் தவறிவிட்டார் என்று நீதிபதி தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

இலங்கையில் பேரினவாதத்தின் பெயரால் - பௌத்த, சிங்கள மேலாண்மைத் திமிரில் - தினவெடுத்து அட்டகாசம் புரியும் காவியுடை தரித்த மதவாதிகள், நீதிமன்றம் சுட்டிக்காட்டிய இந்த இரண்டு விடயங்களையும் கவனிக்க வேண்டும்.

இந்த நாட்டில் நிலையான அமைதி, மதசமத்துவம், இனசௌஜன்யம், சமாதான சகவாழ்வு போன்றவை நிலைக்க முடியாமைக்கு காரணம் காவி உடை தரித்த மதத் தீவிரப் போக்காளர்களின் மேலாண்மைத் திமிர்தான். அது, இன வெறியாகக் கட்டவிழ்ந்து, மத அடக்குமுறை மேலாதிக்கமாக மூர்க்கத்துடன் நடைமுறையில் தீவிர வடிவம் எடுக்கிறது.

இத்தகைய அடாத்துத்தனங்களை நீதிமன்றம் கண்மூடிப் பார்த்திருக்காது, நீதி செய்யும் என்ற நம்பிக்கையை ஒரு சில முன்னுதாரணங்கள் மூலம் நிரூபித்துக் காட்டினால் போதும். எல்லாம் வழிக்கு வரும்.

ஞானசாரருக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடுமையான பாடம் - நான்கு வருடக் கடூழியச் சிறை என்ற தண்டனை - அந்தத் திசையில் முதல் தடம்தான்.

# அடுத்த தலைமுறை விமானத்தை உருவாக்கத் தயாராகும் ஜப்பான்

டோக்கியோ, மார்ச் 29

ஹைட்ரஜன் எரிபொருள் என்ஜினைப் பயன்படுத்தி அடுத்த தலைமுறை விமானத்தை ஜப்பான் உருவாக்க உள்ளது.

ஜப்பானின் பிரபல வாகனத் தயாரிப்பு நிறுவனமாக மிட்சுபிசி நிறுவனம், அடுத்த தலைமுறைக்கான பயணிகள் விமானத்தை உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

பசுமை புரட்சி, புவி வெப்பமயமாதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு உருவாக உள்ள இந்த விமானத்தில் கரியமில வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் ஹைட்ரஜன் எரிபொருள் என்ஜின் பயன்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜப்பானின் தொழில்துறை அமைச்சகம் ஒப்புதல் அளிக்கப்பட்டு 2035 ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட திட்டமிடப்பட்டுள்ளது.



இந்த திட்டத்திற்கு முதல்கட்டமாக 33 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் வடகொரியாவை காத்தது ரஷ்யா

## வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி



நியூயோர்க், மார்ச் 28

“வீட்டோ” அதிகாரத்தை பயன்படுத்தி வட கொரியாவுக்கு எதிரான பிரேரணையை ரஷ்யா முறியடித்தது.

வட கொரியாவுக்கு எதிரான ஐ.நா. பொருளாதார தடைகளை ஐ.நா. நிபுணர்களை கொண்டு மேற்பார்வை செய்யும் பிரேரணையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் அமெரிக்கா கொண்டு வந்தது. இதற்கு ஆதரவாக 13 நாடுகளும் வாக்களித்தன.

ஆனால் ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி, அந்தப் பிரேரணையை செயலிழக்க வைத்தது. அதேநேரம் சீனா இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

# எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தொடர்ந்து பேச இந்தியா – சீனா தீர்மானம்

புதுடில்லி எல்லையில் இருந்து படைகளை திரும்பப் பெறுவது, எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது ஆகியன தொடர்பாகத் தொடர்ந்து பேசுவது என, இந்தியா – சீனா உயரதிகாரிகளின் நிலையிலான ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா – சீனா இடையே எல்லைப் பிரச்சினை நீண்டகாலமாக இருந்து வருகிறது. இதைத் தவிர, 202இல், கிழக்கு லடாக்கில் சீனஈராணுவம் அத்துமீறி நுழைய முயன்றது. இதில் மோதல் வெடித்தது. இதைத் தொடர்ந்து எல்லையில் இரு நாட்டு படைகளும் குவிக்கப்பட்டுள்ளன.

படைகளை விலக்கிக் கொள்வது தொடர்பாக, இராணுவ அதிகாரிகள் அளவில் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது.

இந்நிலையில், எல்லைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண, இரு நாட்டுக் கூட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன், 29ஆவது கூட்டம், சீனாவின் பீஜிங்கில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், இந்திய வெளியுறவுத் துறையின் கிழக்கு ஆசியப் பிரிவு இணைச் செயலர் கவுரங்கலால் தாஸ், சீனாவின் வெளியுறவுத் துறையின் எல்லை மற்றும் கடல் விவகாரங்கள்



துறை டைரக்டர் ஜெனரல் ஹாங் லியாங் தலைமையில் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

எல்லையில் அமைதி நிலவுவதற்கு, படைகளை விலக்கி கொள்வது, எல்லைப் பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வு காண்பது அவசியம். இரு தரப்பும் தொடர்ந்து, தூதரக மற்றும் இராணுவ நிலையில் பேச்சு நடத்தி, விரைவில் தீர்வு காண்பதற்கான வழிகளை உருவாக்குவது என, கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக, இந்திய வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் கேளிக்கை விடுதியின் மேற்கூரை இடிந்து 3 பேர் உயரிழப்பு



சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள ஒரு கேளிக்கை விடுதியின் மேற்கூரை இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது. இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை ஆழ்வார்பேட்டை செயின்ட் மேரிஸ் வீதியில் ஷெக்மேட் என்ற தனியாருக்குச் சொந்தமான கேளிக்கை விடுதி செயல்பட்டு வருகிறது. இந்த விடுதியின் மற்கூரை, நேற்று இரவு எதிர்பாராதவிதமாக இடிந்து விழுந்து விபத்துக் குள்ளானது. இந்த விபத்தில் மூன்று பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இடிபாடுகளில் சிக்கியவர்க ளின் உடலை மீட்கும் பணியில் பொலிஸார் மற்றும் கொமாண்டோ படையினர் ஈடுபட்டனர்.

ஜே.சி.பி. இயந்திரங்களின் உதவியுடன், கட்டட இடிபாடுக ளுக்குள் சிக்கியிருந்த மூன்று பேரின் உடல்களும் மீட்கப் பட்டு, பிரேத பரிசோதனைக்காக ராஜீவ் காந்தி அரசு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டன என தகவல் வெளியாகி உள்ளது. மேலும், இந்த விபத்து குறித்து அபிராமபுரம் பொலி ஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின் றனர்.

இந்த கேளிக்கை விடுதி அப்பகுதியில் உரிய உரிமத்து டன் நடத்தப்படுவதாக கூறப்படுகிறது. மேலும், ஐ.பி.எல். போட்டியைக் காண இந்த விடுதிக்கு வருவதற்கு பலரும் முன்பதிவு செய்திருந்தனர் என கூறப்படுகிறது.

இந்த நிலையில், எதிர்பாராத விதமாக இந்த விபத்து நிகழ்ந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த விபத்தில் உயிரிழந்த மூவரும் வடமாநிலத் தொழிலாளர்கள் என்று கூறப்படுகிறது.

3 பேர் உயிரிழந்த கேளிக்க விடுதியின் அருகோ, மெட்ரோ ரயில் நிர்வாகத்தின் சார்பில் சுரங்கம் தோண்டும் பணி நடந்து வருகிறது. இந்த பணியால் ஏற்பட்ட அதிர்வின் காரண மாக, கேளிக்கை விடுதியின் மேற்கூரை இடிந்து விழுந்து விபத்துக்குள்ளனதாக பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்ததாக கூறப்படுகிறது.

# நான் அரசியலுக்கு வந்தது காலத்தின் கட்டாயமாகும்

## விஜய பிரபாகரன் கருத்து



“ஓர் இளைஞனாக விருதுநகர் தொகுதியில் நிற்கிறேன். ஒருநாள் அரசியலுக்கு வருவேன் என்று தெரியும். ஆனால், இவ்வளவு சீக்கிரம் வருவேன் என்று தெரியாது. இது காலத் தின் கட்டாயம்.”

– இவ்வாறு விருதுநகர் தே.மு.தி.க. வேட்பாளர் விஜய பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி பாவாடி தோப்பு பகுதியில் அ.தி.மு.க. கூட்டணி சார்பில் பிரச்சார பொதுக்கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. இதில் அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. சார்பில் விருதுநகர் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் விஜய பிரபாகரன் பேசுகையில்,

“ஒரு இளைஞனாக விருதுநகர் தொகுதியில் நிற்கி றேன். ஒருநாள் அரசியலுக்கு வருவேன் என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம் வருவேன் என்று தெரியாது. இது காலத்தின் கட்டாயம்.

விஜயகாந்தின் சொந்த மண்ணான விருதுநகர் தொகுதி யில் போட்டியிடுகிறேன். இந்த பந்தம் என்றுமே விட்டுப் போகாது. எம்.ஜி.ஆர், கருப்பு எம்.ஜி.ஆர். என்ற உறவு இன்றும் தொடர்கிறது.” – என்றார்.

முன்னதாக தே.மு.தி.க. வேட்பாளர் விஜய பிரபாகரனை ஆதரித்து பேசிய அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி,

”விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பது போல் விஜய பிரபாகரன் உள்ளார்.

தி.மு.க. அரசின் ஊழல்களை துறைகள் வாரியாக பட்டியலிட்டு ஆதாரங்களுடன் ஆளுநரிடம் நாங்கள் மனு அளித்தோம். முதல்வரின் மருமகனும் மகனும் 30 ஆயிரம் கோடி ரூபா சம்பாதித்து உள்ளனர் என தி.மு.க. அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் ஓடியோவில் பேசி உள்ளார். அந்தப் புகார் மனுவை ஆளுநர் விசாரித்து இருந்தால் மக்கள வைத் தேர்தலுடன் சட்டப்பேரவை தேர்தலும் வந்திருக்கும். ஆளுநர் நடுநிலையோடு செயல்பட வேண்டும்” – என்றார்.

# சாயி நிலையத்தில் இஃப்தார் நிகழ்வு





கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ். என்.உதயநாயகன் தலைமையில் கடந்த புதன்கிழமை இரவு இஃப்தார் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது, மௌலவி இனாம் இன்ஷாப் இஸ்லாமிய மத அனுஷ்டானங்களை மேற் கொண்டிருந்தார்.பிரஸ்தாப நிகழ்வில், சமூக சேவையாளர் கே.எம்.ஜே.பஷீர் சிறப்பு அதிதி யாக கலந்து கொண்டார். சாயி நிலையத்தின் சார்பில் அதிதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள்:- நடா குணசேகரன்)




# திருகோணமலை புடைவைக்கட்டில் 9 வயதுச் சிறுமி மீது துஷ்பிரயோகம்!

## கொழும்பைச் சேர்ந்த நபர் கைது

(எச்.எம். ஹலால்தீன்)

திருகோணமலை, குச்சவெளி, புடைவைக்கட்டைச் சேர்ந்த 9 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத் தப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர், அந்த ஊரில் தற்கா லிகமாக வசித்து வரும் கொழும்பைச் சேர்ந்தவர் எனத் தெரி விக்கப்படுகின்றது.

சிறுமியின் தாயார் வெளிநாடு சென்றுள்ளார். தந்தையின் பராமரிப்பின் கீழ் இருந்து வந்த சிறுமியே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மனைவி வெளிநாடு சென்றதையடுத்து தொடர்ந்து போதைப்பொருள் பழக்கத்தில் ஈடுபட்டு வந்த தந்தை இதைப் பொருட்படுத்தாது இருந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவரைப் பொலிஸார் கைதுள்ளனர்.

மேலதிக விசாரணைகளைக் குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை

## சுகாதாரப் பரிசோதகர்கள் முன்னெடுப்பு

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இலங்கைப் பொது சுகாதாரப் பரிசோதகர்களால் விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக சுமார் 1,500 உத்தியோகத்தர்கள் ஈடு படுத்தப்பட்டுள்ளனர் என இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 365 சுகாதார வைத்திய பிரிவு களையும் உள்ளடக்கும் வகையில் இந்த சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்படுவதாக சங்கத்தின் தலை வர் உபுல் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் இதன் போது பரிசோதிக்கப்படவுள்ளன.

உணவு பதப்படுத்தும் நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் தொற்றுநோயால் பாதிக் கப்படவில்லை என்ற மருத்துவ அறிக்கையை வைத் திருப்பது கட்டாயம் எனவும் அவர் தெரிவித்துள் ளார்.

# குளிரூட்டி லொறியில் கடத்தப்பட்ட பீடி இலை, கடல் அட்டைகள் சிக்கின

## கண்டக்குழி தங்கெல பகுதியில் சம்பவம்

(கற்பிட்டி சியாஜ்)

கற்பிட்டி கண்டக்குழி, தங்கெல பகுதியில் வைத்து பெருந்தொகையான பீடி இலைகள் மற்றும் கடல் அட்டைகள் கற்பிட்டி பொலிஸாரின் சுற்றி வளைப்பில் கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டக்குழி கடல் வழியாக சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட பீடி இலைகள் 61 பொதிகளும் மற்றும் கடல் அட்டைகள் 06 பொதி களும் கண்டக்குழி கடற்கரையிலி ருந்து வெளி ஊருக்கு கொண்டு செல்லும் வழியில் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ.டப்யூ.எஸ். எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினராக் கைப்பற்றப்பட்டுள் ளன.

இதன்போது இக்கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட குளிரூட்டி லொறி யுடன் புத்தளத்தைச் சேர்ந்த வாகனச் சாரதியும், கற்பிட்டி ஜனசவிபுரவைச் சேர்ந்த மற்றொருவரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பற்ற பீடி இலைகள் மற் றும் கடல் அட்டைகளின் பெறுமதி சுமார் மூன்றரைக் கோடி ரூபா எனக் கூறப் பட்டது. மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனமை குறிப்பிடத்தக் கது.

# வெய்யிலில் முழங்காலில் முட்டிபோட வைத்து மதரஸா மாணவர்களுக்குக் கடும் தண்டனை!

## அம்பாறை மருதமுனையில் சம்பவம்; பொலிஸார் விசாரணை

(கனகராசா சரவணன் )

மதரஸா ஒன்றில் பகல் வேளையில் நித்திரைக்குச் செல்லாது விளையாடிக் கொண்டிருந்த மாணவர்களுக்கு சுட்டெரிக்கும் வெய்யிலில் முழங்காலில் முட்டி மோட வைத்து, நிறுத்தி தண்டனை வழங்கிய சம்பவம் அம்பாறை பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனைப் பகுதியில் இடம் பெற்றிருப்பதாகவும், அது தொடர்பான விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




மருதமுனை பகுதியில் அமைந்துள்ள இந்த மதரஸாவில் அரபி கல்லூரியில் குரான் கல்வி கற்றுவரும் சிறு வயதுடைய மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பகல் வேளையில் நித்திரைக்குச் செல்லாமல் விளையாடிக் கொண்டிருந்தமையையடுத்து அவர்களுக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து இது தொடர்பாக அந்த மதரஸாவிற்குஅடுத்த நாள் புதன்கிழமை பெரியநீலாவணைப் பொலிஸார் நேரில் சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர் எனவும், பாதிக்கப்பட்ட மாணவாகளிடம் தனித்தனியாக வாக்குமூலங்கள் பெற்றுவருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை புனித ரமழான் மாதத்தில் நோன்பாளியாக இருக்கும் நிலையில் இம்மாணவர்களுக்கு இந்தச் சித்திரவதைத் தண்டனை இடம்பெற்றுள்ளமை தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினர் நேற்று வியாழக்கிழமை அந்த மதரஸாவுக்குச் சென்றனர். பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள். கல்லூரி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள் உட்பட அனைவரிடமும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதேவேளை கல்லூரி நிர்வாகம் கல்லூரியான மதரஸாவின் அதிபரை உடனடியாகக் கடமையில் இருந்து விலக்கியுள்ளதாகவும், பதில் அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தனர்.

கடந்த வருடம் சாய்ந்தமருது பகுதியில் மதரஸா ஒன்றில் ஒரு மாணவன் மர்மமாக உயிரிழந்த சம்பவம் இடம்பெற்ற நிலையில், மீண்டும் மதரஸாக்களில் மாணவர்களுக்கு மோசமான சம்பவம் இடம்பெற்று வருகின்றமௌ குறிப்பிடத்தக்கது.



# ஆஸி உயர்ஸ்தானிகர் மன்னாருக்கு விஜயம்

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன் நேற்று மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.


மன்னாருக்கு சென்றிருந்த ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையிலான குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மன்னாரிலுள்ள தனியார் விடுதியொன்றில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

பின்னர் ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கான அலுவலகத்திற்குச் சென்றிருந்தார்.

இதன்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்கள் மற்றும் ஆஸ்திரேலிய நிதியுதவியில் திட்டங்களை அமுல்படுத்திய நிறுவனங்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.




# கல்லடியில் மாஸ்டர் சிவலிங்கத்தின் 91ஆவது ஜயந்தி தினம் அனுஷ்டிப்பு

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு 'ஆணிவேர்' உற்பத்திகள் நிறுவனத்தினரால் மறைந்த கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கத்தின் 91 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூரும் முகமாக மாஸ்டர் சிவலிங்கத்தின் இல்லத்திற்கு முன்பாக பொது மக்களுக்கு 'சிறப்பு கூழ்' வழங்கும் நிகழ்வொன்று நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாஸ்டர் சிவலிங்கத்தின் மீது பெருமதிப்பும், மரியாதையும் வைத்திருக்கும் ஏராளமான கல்லடி வாழ் பொதுமக்கள் அவரது இல்லத்திற்கு வருகை தந்து பாரம்பரிய மண் குவளையில் வழங்கப்பட்ட கூழை மிக ஆர்வத்துடன் பெற்று அருந்தினர். உற்றார், உறவினர்களுக்கு வழங்குவதற்காக வாங்கியும் சென்றனர்.

அத்தோடு சிவலிங்கத்தினால் எழுதப்பட்ட மாணவர்களுக்கான 'மகாபாரதக்கதை' என்ற நூலும் பொது மக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், மாஸ்டர் சிவலிங்கத்தின் உற்றார்,உறவினர்கள்அவரின் இல்லத்திற்கு வருகை தந்து அவரின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.















# அரிசிக்குத் தட்டுப்பாடு வரலாம் என எச்சரிக்கை

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அரிசியின் விலையை அதிகரிப்பதற்கு பாரிய நெல் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்து வருவதாக சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் காரணமாக, எதிர்காலத்தில் நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என்று சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தநிலையில், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கு விதிக்கப்பட்டிருந்த 65 ரூபா விசேட பண்ட வரி, 1 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எனினும் பாரிய நெல் தொழிற்சாலை உரிமையாளர்கள் 90 தொடக்கம் 100 ரூபா வரையிலேயே, ஒரு கிலோ நெல்லை கொள்வனவு செய்கின்றனர் என சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# முட்டை இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டது

இந்திய முட்டை இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தேவையான முட்டைகள் கையிருப்பிலுள்ளமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 மில்லியன் முட்டைகள் கையிருப்பிலுள்ளன என அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் தலா 5 லட்சம் முட்டைகள் சதொச விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் முட்டையின் விலை 43 ரூபாவாகும்.

# மலையகத் தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பு!



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்தே அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி தலையீடு செய்துள்ளார் என அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இதனிடையே, பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அமைச்சருக்கு தெளிவுபடுத்தினர்.

புதிய தொழில் பாதுகாப்பு சட்டத்தின் ஊடாக தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாக்க விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.03.2024




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள்.

இன்று உங்களின் பெரும்பான்மையான ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள். அது உங்கள் பணியில் பிரதிபலிக்கும். உங்களின் தனித் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக அதே சமயம் நகைச்சுவை உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களின் உற்சாகமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் அனுகூலம் குறைந்து காணப்படும். வெற்றியைப் பெற பொறுமை அவசியம். நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரலாம். எனவே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பலன் இருக்காது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடனான உறவு குறித்து பெரியவர்கள் ஆலோசனை வழங்கினாலும் நீங்கள் கேட்கும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை கவனமுடன் கையாளவும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தேவையற்ற விஷயங்களுக்கு பதட்டமடைவீர்கள் அதனை தவிர்த்து உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை. இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும். உங்கள் சகபணியாளர்களை நண்பர்கள் போல கருதிப் பழக வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் சுமூக உறவு கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

சம்பாதித்த பணத்தை இன்று குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். பணத்தை அதிகமாக சம்பாதிப்பதற்கும் சேமிப்பதற்கும் வாய்ப்பு குறைவு.




இன்று வெற்றிகரமான நாளாக அமையும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களிடம் அதிக ஆற்றல் மற்றும் விழிப்புணர்வு காணப்படும்.அவை உங்களின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் பணியில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். பணிகளை தன்னிச்சையாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியத்தை சிறப்பாக பாரமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.




இன்று மன உளைச்சல் காணப்படும். பாடல்கள் கேட்பது அல்லது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் மலை போல் குவிந்து கொண்டே இருக்கும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அதிக பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. என்றாலும் உங்கள் உடன் பிறப்புகளின் நலனுக்காக பணம் செலவு செய்ய வேண்டி நேரும்.




இன்று நற்பலன்கள் கூடுதலாக கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக இன்று உங்கள் செயல்களை செய்வது கடினமாக உணர்வீர்கள். இன்று அமைதியின்மை காணப்படும். நேர்மறை எண்ணம் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் மகிழ்ச்சியாக இருக்க இந்த வேறுபாடுகளை களைவது சிறந்தது. புத பகவான் உறவின் நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதியும் ஈடுபாடும் தடைகளை வெற்றிப் படிகளாக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இந்தப் பயணம் உங்களுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையாது. விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் துணையுடம் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். எனவே சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு மகிழ்ச்சி அடையும் நிலை காணப்படாது.

இன்று பதற்றம் காணப்படும். நீங்கள் அதிகப்படியாக வருத்திக் கொள்ள வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.03.2024




இன்றைய நாளில் அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

பணிகளைப் பொறுத்த வரை இன்று சற்று கடினமாக காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படும்.

நகைச்சுவை அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை கடனாக வாங்குவீர்கள். அதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள் வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங் களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று அமைதியுடன் இருக்க நீங்கள் தைரியம் மற்றும் உறுதியுடன் நம்பிக் கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள நீங்கள் நேர்மறை எண்ணத் துடன் இருக்க வேண்டும்.

அதிகமான பணிகள் காரணமாக இன்று நீங்கள் ஓய்வின்றி வேலை செய்வீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை உண் டாக்கும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். உங்களின் மன நிலை தான் எல்லா வற்றிற்கும் காரணம் என்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. வீண் விரயங்கள் காணப்படும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும். விருந்தினர் வரகை உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் மகிழ்ச்சி யாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனி மையாக இருக்கும். இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்று வீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டு வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக வளர்ச்சி பெரும். இன்று உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணவரவு காணப்படும்.




நீங்கள் அறிவு பூர்வமாக செய லாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும். இன்றைய நாளைச் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன் றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

ஒவ்வாமை காரணமாக சளி இருமல் போன்ற தொல் லைகள் காணப்படும்.








# இலங்கை உதைபந்தாட்ட அணி ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விற்கும் இலங்கை தேசிய உதைபந் தாட்ட அணிக்கும் இடையிலான சந் திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

கொழும்பு குதிரைப் பந்தயத் திட லில் நடைபெற்ற நான்கு நாடுகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் பூட்டானுக்கு எதிராக இலங்கை உதைபந்தாட்ட அணி அபார வெற்றியீட்டியதோடு வெற்றியீட்டிய இலங்கை அணி வீரர்களுக்கு ஜனா திபதி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள தெற்காசிய உதைபந்தாட்டப் போட்டி யில் வெற்றிபெறுவதற்கு இலங்கை உதைபந்தாட்ட அணியை ஜனாதிபதி ஊக்குவித்தார்.

உதைபந்தாட்டத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபி விருத்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குகின்றேன் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.



கடந்த சில மாதங்களாக இலங் கையில் உதைபந்தாட்டத்தில் முன் னேற்றம் ஏற்பட்டுள்ள தோடு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் தொழில் முறை போட்டிகளில் விளையாடும் இலங்கை வீரர்களைக் கொண்டு வலுவான தேசிய அணியை உருவாக் கியுள்ளது.

வீரர்களுடன் ஜனாதிபதி சிநேக பூர்வமாக உரையாடினார். அத்துடன், அவர்களுடன் குழுப் படம் எடுத்துக் கொண்டார். இதன் போது இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமார் ஜனாதி பதிக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியின் பிரதான பயிற்றுவிப்பாளர் எண்டி மொரிசனும் கலந்து கொண்டார்.

